**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.116/2019 தேதி-20.02.2025

(P.W.1) - தங்கமணி
குறுக்கு விசாரணை

1. வழக்கு ஏ-பட்டிகை சொத்தை நான் விலைக்கு வாங்கி எவ்வளவு காலம் ஆகின்றது என்றால் 30 வருடங்களாகிறது. எப்போது வீடு கட்டினேன் என்றால் 1998-ஆம் வருடமாகும். அது அரசாங்கம் அளித்த வீடாகும். மேற்படி வீடு கட்ட பஞ்சாயத்தின் அனுமதி பெற்றேனா என்றால் பெற்றேன். அதற்கான வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். மேற்படி வீடு கட்ட அனுமதி பெறும்போது வழிப்பாதை காட்டவேண்டும் என்றால் சரிதான். பி-பட்டிகை சொத்தைதான் வழிப்பாதையாக காட்டினேன் என்றால் சரிதான். என் சொத்திற்கு கிழக்காக செல்லும் ரோடு குமரன்குடி கொற்றவிளை செல்லும் பாதை என்றால் சரிதான். நான் யாரிடமிருந்து ஏ-பட்டிகை சொத்தை விலைக்கு வாங்கினேன் என்றால் தங்கசாமி என்பவரிடமிருந்து வாங்கினேன். தங்கசாமி தனக்கு பாத்தியப்பட் 35 சென்ட் சொத்திலிருந்து எனக்கு 10 சென்ட் சொத்தை விலைக்கு கொடுத்தார் என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன தங்கசாமியின் அப்பா பெயர் என்ன என்றால் தாணியல் ஆகும். தாணியலுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் எத்தனை என்று தெரியாது. அனைத்து பிள்ளைகளுக்கும் தாணியல் சொத்துக்களை பாகம் கொடுத்தார் என்றால் சரிதான். நான் வாங்கிய 10 சென்ட் சொத்திலிருந்து கிழக்கு போகும் ரோடு வரை உள்ள சொத்து தாணியல் சொத்து என்றால் சரிதான். மேற்படி தாணியல் சொத்திற்கு வடக்கு பக்கம் வழிப்பாதை உள்ளதா என்றால் நடைபாதை உள்ளது. என் வீட்டின் கிழக்கு தெற்காக ரமேஷ் என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ரமேஷ் வீட்டிற்கு வடக்கிலிருந்து தெற்காக வழிப்பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வழிப்பாதை தற்போதும் உண்டு என்றால் சரிதான். மேற்சொன்ன வழிப்பாதையைத் தொட்டுதான் என் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் அந்த வழிப்பாதையைத்தான் உபயோகித்து வந்தேன் என்றால் சரியல்ல. வழக்கின் பிரதிவாதியான ராமகிருஷ்ணன் சொத்தின் கிழக்கு பாகம் முட்கம்பி வேலி உள்ளது என்றால் இல்லை. மேற்சொன்ன ராமகிருஷ்ணன் சொத்து என் சொத்தை விட

உயரம் குறைந்த சொத்து என்றால் சரிதான்.



(P.W.1) - தங்கமணி

<u>குறுக்கு விசாரணை</u>

3. ரமேஷ் என்பவரின் சொத்து எங்கள் சொத்தை விட உயரம் கூடிய சொத்து என்றால் சரிதான். மொத்த சொத்தும் கிழக்கிலிருந்து மேற்காக சரிந்த சொத்தாகும் என்றால் சரிதான். குமரன்குடி ரோட்டிலிருந்து மேற்கே போகும் ரோடு தெற்கு நோக்கி சென்று மீண்டும் மேற்கு நோக்கி சாணல் ரோட்டை தொடுகிறது என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்திற்கு வடக்கு பக்கம் ரோடு செல்கிறது என்றால் சரியல்ல. யாருடைய சொத்து வழியாக ரோடு செல்கிறது என்றால் பிரபாகரன் என்பவரின் சொத்து வழியாக செல்கிறது. என்னுடைய சொத்து வர்க்கீஸ் மற்றும் ரமேஷ் என்பவர்களின் சொத்திற்கிடையே உள்ளது என்றால் சரிதான். வர்க்கீஸ் சொத்து மற்றும் எனது சொத்தின் தெற்கு நோக்கி கிழக்காக வழிப்பாதை செல்கிறது என்றால் அப்படியொரு பாதை இல்லை. என் வீட்டின் தெற்கு பக்கம் யாருடைய வீடு உள்ளது என்றால் சுரேஷ் என்பவரின் வீடு உள்ளது. சுரேஷ் வீட்டை தொட்டு தெற்கு பக்கம் யாருடைய வீடு உள்ளது என்றால் குமார் என்பவரின் வீடு உள்ளது. மேற்சொன்ன வழிப்பாதை எவ்வாறு செல்கிறது என்றால் சாணல் ரோட்டிலிருந்து கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறது.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)